தமிழகம்

சிறப்பு ஆசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மலர் 4] சோபகிருது ஐப்பசி 11 28—10—63 கிழமை இதழ். விலை – 10 காசுகள். [இதழ் 48



ஓம்:

குன்றக்குடி

ஸ்ரீ சண்முகநாதன்

கோடி அருச்சனை

தொடக்கம்: சோபகிருது–ஐப்பசி, ★ நிறைவு: குரோதி–வைகாசி

சகஸ்திரநாம அருச்சனை	ரூ. 7—00
சண்முகாருச்சனை	ரூ. 50—00
அரைநாள் உபயம் (3 சண்முகாருச்சனை)	ரூ. 125—00
ஒரு நாள் உபயம் (6 சண்முகாருச்சனை)	ரூ. 150—00
லெட்சாருச்சனை	ரூ. 500—00

அருச்சனையில் அனைவரும் பங்குபெற்று அருள்பெறவேண்டுகிறோம்.

கோடி அருச்சனைக்குப் பணம் அனுப்புகிறவர்கள், தங்கள் முழுவிலாசம் நட்சத்திரத்துடன், காரியதரிசி கோடி அருச்சனைக்குழு, குன்றக்குடி. இராமநாதபுர மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

சமய சமுதாய அரசியல் இலக்கியக் கருத்திதழ்

அப்பர் தரும் விருந்து:

உள்ளம் பேணி உய்க!

உள்ளத்திற்கும் உடலுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு; உள்ளத்தில் கொடுமையை வைத்துக் கொண்டு, உடம்பைப் பேணி வளர்த்து வாழும் வாழ்க்கை முகக்கப் பயன்படாத காம்பில்லாத அகப்பை போலப் பயனற்றொழியும். எனவே, வாழ்வதறியாமல், எண்ணற்ற கோடி நினைத்து சஞ்சலப்படுகிற வாழ்க்கையிலிருந்து விடுதலைபெற வேண்டும். இந்தக் கருத்தை அப்பரடிகளின் அழகிய பாடல் வலியுறுத்துவதைப் பாருங்கள்:

ஓம்பினேன் கூட்டை வாளா
உள்ளத்தோர் கொடுமை வைத்தே
காம்பிலா மூழை போல
கருத்திற்றே முகக்க மாட்டேன்
பாம்பின்வாய்த் தேரை போல
பலப்பல நினைக்கின் றேனை
ஓம்பிநீ உய்யக் கொள்ளாய்
ஒற்றியூ ருடைய கோவே!

★

தமிழகப் புலவர் குழு

தமிழகப் புலவர் குழுவின் பதினொன்காவது கூட்டம் 20-10-63ல் புதுவை திரு. கோவிந்தசாமி முதலியார் அவர்களின் மாளிகை மேன்மாடத்தில் திரு. அ. கி. பரந்தாமனார் தலைமையில் நடைபெற்றது. புதுவை அரசின் தலைமை நீதிபதி திரு. சிவா கூட்டத்தைத் தொடங்கி வைத்தார் மேற்படி கூட்டத்தில், மதுரையில் தொடங்கப் பெற விருக்கும் புதிய பல்கலைக் கழகத்தில் தமிழைப் பயிற்சிமொழி ஆக்குவதுடன் அப்பல்கலைக் கழகத்திற்கு திருவள்ளுவர் பல்கலைக் கழகம் என்று பெயரிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டும்,

28-6-63 'தினமணி' யில் காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியாரவர்கள் ஆண்டாளம்மையின் தமிழ்ப் பாடலின் பொருளை உணராமலும் திருக்குறளின் பெருமையை மதிக்காமலும் பேசினதாக வெளிவந்திருக்கும் 'தீக் குறளைச் சென்றோதோம்' ஸ்ரீ ஆண்டாள் கூறியிருப்பது திருக்குறளைப் படிக்க மாட்டோம் என்பதே என்ற செய்தியைக் கண்டு தமிழகப் புலவர் குழு உள்ளங் கொதிக்கிறது என்றும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

தமிழகம்

அன்பாலே மக்கள்குலம் இணைந்து வாழும்
அருள்நெறியைப் பரப்புதலே எங்கள் நோக்கம்

மலர் 4] 28—10—63 [இதழ் 48

கூட்டுமுயற்சி வேண்டும்

கொள்கையால் முற்றிலும் வேறுபட்ட கென்னடியையும் குருஷேவையும் கூட ஒன்றாகக் கூட்டிவிடலாம் போலிருக்கிறது. ஆனால் மேன்மை கொள் சைவ நீதியை இந்த மேதினியில் பேணி வளர்த்துக் காக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் உடைய தமிழகச் சைவத் திருமடங்களின் தலைவர்களை ஒன்றாகக் கூட்டுவது அத்துணை எளிதாகத் தெரியவில்லை.

மனித சமுதாயத்தை வாழவைக்க வேண்டிய-மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அந்த ஆன்மாக்களைப் பேணிக் காக்க வேண்டிய நமது சைவத் திருமடங்கள் பெரும்பாலும் மக்களோடு தொடர்பின்றி இயங்கி வருகின்றனவன்ற உண்மையை நாம் பெரிதும் வருத்தத்தோடு ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

"மக்கட்கும், திருமடங்கட்கும் தொடர்பு ஏற்பட வேண்டும்; தமிழகச் சைவத் திருமடங்களின் தலைவர்களுக்குள் ஒரு கூட்டு முயற்சி வேண்டும்; திருமடங்களும் திருக் கோயில்களும் ஆன்மாக்களின் பெட்டகமாகத் திகழ வேண்டும்" என்று அண்மையில் தவத்திரு அடிகளார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையராக திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் ஆட்சிப் பொறுப் பேற்றிருக்கும் இந்தக் காலம், தமிழகச் சமய வரலாற்றில் குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சிறப்புடைய ஒரு காலமாகும். இப்போது, தமிழகச் சமய உலகில் ஒரு புத்தொளி தோன்றியிருக்கிறது. புதுமை மலர்ந்திருக்கிறது. நல்ல மனப் பண்பும், சிறந்த இலட்சிய நோக்கும் உடைய நமது அறநிலைய ஆணையர் அவர்களின் ஆட்சிக் காலத்திலேயே தமிழகச் சைவத் திருமடங்களின் தலைவர்களுக்குள் ஒரு கூட்டு முயற்சி ஏற்பட வேண்டும். இந்தக் கூட்டு முயற்சி ஏற்பட சைவப் பெருங்குடி மக்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

—துணை ஆசிரியர்

வாழ்விக்க வந்தோர் வரலாறு

24. மெய்ப்பொருளார்.

மெய்ப்பொருள் நாயனார் என்பார் சேதி நன்னாட்டைச் சார்ந்த திருக்கோவிலூரில் வாழ்ந்த மன்னர் பெருமான். அடியவர் தம் திருவேடத்தினையே மெய்ப்பொருளாகக் கொண்டு தெளிந்த சிந்தையர் ஆதலின் மெய்ப்பொருள் நாயனார் என்ற சிறப்புப் பெற்றார். மலையமான் வழித்தோன்றிய அம்மாண்பினர் பொருகளஞ் சென்று போர்பல புரிந்து மாற்றாரை வென்று தம் நாட்டிற்கு நலம்பல சேர்த்த நற்பண்பினர். இறையடியார்கள் எண்ணமறிந்து ஏவல் புரியும் இனிய தொண்டர். அறமும் அரசியலும் இரு விழிகள் எனக்கொண்டு அரசியல் நெறிவந்த அறநெறி வழுவாமல் காத்த அன்பர்; மங்கை பங்கனின் திருக்கோயில்கள் அனைத்திலும் ஆறுகால பூசையும் ஏழிசைப் பாடல்களும் ஆடல்களும் இனிதே நடைபெறச் செய்வதைத் தம் திருத்தொண்டுகளில் ஒன்றாகவே கருதினார்.

இங்ஙனமிருந்த நாளில், முத்தநாதன் என்ற ஒரு மன்னன் மெய்ப்பொருள் நாயனாரிடத்துப் பகையுளங் கொண்டான். தனது ஐம்படைகளோடும் பன்முறை படையெடுத்துத் தோற்றுப் போனான். இறுதியாக, மெய்ப்பொருள் நாயனாரைப் பகை கொண்டு வெல்லுதல் முயற் கொம்பே என்றுணர்ந்த முத்தநாதன், மெய்ப்பொருள் வேந்தர் தம் சிலமறிந்தான்; ஆம், நாயனாரின் திருநீற்றன்பையும், சிவனடியார் பக்தியையும் உணர்ந்தான். வஞ்சத்தால் வெற்றிகொளத் திட்டமிட்டான்.

ஒரு நாள் மேனியெலாந்திருநீறு பூசினான்; சடைகளைச் சுருட்டிக் கட்டிக் கொண்டான்; உடைவாளை மறைத்து வைத்துள்ள புத்தகக் கவளியொன்றைக் கையிலேந்தினான்; மனத்தில் மட்டும் வஞ்சமெனும் கறுப்புக் கொண்டான்; இவ்வாறு பொய்த்தவ வேடங் கொண்ட முத்தநாதன், மெய்யடியார் அரண்மனையை நோக்கினான்; வாயில் காத்து நின்றோர் அவனைச் சிவனடியார் என்றே கருதி, அரண்மனையுள் நுழைய அனுமதித்தனர். மாதவ வேடங் கொண்ட அவ் வன்கணாளன் வாயில் பலவற்றையுங் கடந்து சென்றான். இறுதியாகப் பள்ளி வாயிலை அடைந்தான். அங்கிருந்த வாயில் காப்போன், அவ்வஞ்சகனை நோக்கி, 'மன்னர் துயில் கொள்ளும் நேரமிது; எனவே, வேளையறிந்தே போதல் வேண்டும்' என எச்சரித்தான். வஞ்சகக் கள்வனோ, 'மன்னர்க்கு யான் உறுதிப் பொருள் கூறப் போகிறேன். எனவே தடை செய்யாதே' என்று கூறிக் காவலாளனை விலக்கிக் கொண்டு உட்புகுந்தான்—பள்ளிக் கட்டிலில் மன்னன் துயில்வதையும், மருங்கே மாதேவி அமர்ந்திருப்பதையும் கண்டுங்கூட, கட்டிலின் அருகே நெருங்கினான். இது கண்ட மாதேவி விரைந்தெழுந்து, தன் கணவரை எழுப்பினார். மெய்ப்பொருள் நாயனார் விழித்து விரைந்தெழுந்து, பொய்த்தவ வேடம் புனைந்தானை அண்டர் நாயகனார் தொண்டர் எனக் கருதிச் செங்கை கூப்பித் தொழுது, இங்கெழுந்தருளப் பெற்றதென் கொலோ? என்று வினவினார்.

அதுகேட்ட முத்தநாதன், "உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகம நூல்களுள் ஒன்று என்னிடமுள்ளது. அஃது உலகில் வேறெங்கும் காணப்படாதது. அதனை உமக்கு அறிவுறுத்த வந்தேன்' என்றான். இதனைச் செவியுற்ற மெய்ப்பொருளார் ஆனந்த வெள்ளத் தழுந்தினார். 'இதை விடப் பெரும் பேறு வேறென்ன இருக்கிறது? பிரான் அருள் செய்த ஆகமத்தை வாசித்தருள் புரிக' என்றார் மெய்ப்

(11-ம்பக்கம் பார்க்க)

சமயமும் சமுதாயமும்

மனித சமுதாயத்தை அச்சகம், நோய், வறுமை ஆகியவற்றிலிருந்து விடுதலை செய்வதே மிக்குயர்ந்த சமுதாய இலட்சியம். அத்தகைய உயர்ந்த வாழ்வுக்குத்தான் சமய வாழ்வு என்று பெயர்.

மனித சமுதாயத்தைக் குறைவுடைய வாழ்விலிருந்து விடுவித்து, நிறைவுடைய நலவாழ்வுக்கு அழைத்துச் செல்வதுதான் சமயம்.

—அடிகளார்

அசாமிலிருந்து

செய்திக் கடிதம்

-இந்தோ-பீகிங் சமாதானத் தூதுக் குழுவில் சென்றுள்ள டாக்டர் மு. அறம் அவர்கள் அசாமிலிருந்து எழுதிய கடிதம்.

-அக்டோபர் 20.

இன்று நாங்கள் வந்துள்ள சபுவா என்னும் இடம் திப்ருகர் நகரிலிருந்து பத்தொன்பது மைல் கிழக்கில் உள்ளது. நல்ல அழகான ஆதார ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் நாங்கள் தங்கியுள்ளோம்.

திப்ருகர் நகரம் அசாமில் வடகீழ் பகுதியில் உள்ள முக்கியமான நகரம். கடந்த சில ஆண்டுகளில் பிரமபுத்திரா நதி இந்நகரத்தின் மூன்றில் ஒரு பகுதியை விழுங்கிவிட்டது. இன்னும் சிறிது சிறிதாக விழுங்கிக் கொண்டே இருக்கிறது. பிரமபுத்திராவின் கரையில் நின்று பார்த்தோம். ஆவேசமாக அலை வீசிப் பாய்ந்து ஓடுகிறது. இந்த பிரமபுத்திராப் பெருவெள்ளம். அதன் ஆவேசம் நகரத்தின் மேல் சாடாமல் இருப்பதற்காகக் கரையில் பெரும் கற்களை அடுக்கி அதன் மேல் இரும்புக் கம்பிகளாகிய வலைகளைப் போட்டிருக்கிறார்கள், மேலும் கரையிலிருந்து ஆற்றுக்குள்ளே சிறிது தொலைவுக்கு அணை போன்று கட்டியிருக்கிறார்கள். இதன் மூலம் நதியின் வேகத்தைத் தடுத்து நகருக்கு அப்பால் திருப்பிவிட்டிருக்கிறார்கள்.

எங்கள் சமாதான யாத்திரை ஆகஸ்ட்டு முதல் வாரத்திலிருந்து அசாமில் நடந்து வருகிறது. தூப்ரி, கௌரிபூர், கோல்பாரா, கௌகாத்தி, நௌகால், ஜோர்னட், சிப்காகர் முதலிய முக்கிய நகரங்கள் வழியாக நடந்து வந்துள்ளோம். அசாமுக்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. அசாமில் மொத்தம் 495 மைல்கள் நடந்துள்ளோம். டில்லியில் புறப்பட்டதிலிருந்து யாத்திரையினர் 1819 மைல்கள் நடந்துள்ளனர்.

யாத்திரையின் எதிர்காலத் திட்டம் என்ன? இதனைத் தெரிய ஆவலாய் இருப்பீர்கள். கௌகாத்தி நகரத்தில் இது பற்றி விரிவாக யோசனை செய்தோம், இதற்கு திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களும், அமெரிக்க அமைதி இயக்கத்தின் தலைவர் திரு. ஏ. ஜெ. மன்தே அவர்களும் வந்திருந்தார்கள். முக்கிய சீனத் தலைவர் ஒருவரை ஜப்பானில் சந்தித்துவிட்டு திரு. சித்தராஜ் அவர்களும் கௌகாத்தி வந்து சேர்ந்தார்.

கௌகாத்தி கூட்டத்திற்குப் பின் மன்தே, சித்தராஜ் இருவரும் வினோபா அடிகளைச் சந்தித்துப் பேசினார்கள். பின்னர் ஜெயப்பிரகாஷ் மந்தே. சித்தராஜ் மூவரும் டில்லியில் பண்டித நேருஜியைப் பார்த்துப் பேசினார்கள்.

அசாமிலிருந்து வட பர்மா வழியாக தென் சீனா செல்வது என்பது முதலில் எண்ணிய திட்டம். வட பர்மா வழியாகச் செல்வதில் பல தொல்லைகள் உண்டு என்றும், ரங்கூன் வழியாக வரலாம் என்றும் பர்மா அரசாங்கத்தினர் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். இந்நிலையில் ரங்கூன் வழியாக ஹாங்காங் செல்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

சீனத் தலைவர்கள் என்ன நினைக்கிறார்கள்? இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. சீனத் தலைவர் சௌ-பூ-சு ஜப்பானில் சித்தராஜ் அவர்களிடம் சொல்லியது; "சீனா சமாதானத்தையே விரும்புகிறது. சீன மக்கள் எல்லோரும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். யாத்திரைக் குழுவினர் இந்திய அரசாங்கத்திடம் சொல்லி சமாதானப் பேச்சு வார்த்தை நடத்த ஏற்பாடு செய்யலாம். இந்த யாத்திரைக்கு ஆதரவாக உள்ள ஜெயப்பிரகாஷ் நாராயணனும் மந்தேயும் சீனாவின் நண்பர்கள் அல்ல." ஜப்பான் புத்த சங்கத்தின் தலைவர் பியூஜி குருஜி என்பவர் பீக்கிங் சென்று வந்தார். அப்பொழுது அங்கு சீனத் தலைவர்களிடம் இந்த யாத்திரை பற்றிப் பேசினர். அந்த சமயத்திலும் சீனத் தலைவர்கள் மேலே சௌ-யூ-சு சொல்வது போன்றே சொல்லியிருக்கிறார்கள்.

யாத்திரையின் சார்பாகத் திரு. சங்கரராவ்தேவ் அவர்கள் சீனத் தலைவர் மாவ்-சே-துங் அவர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார். "சீனா - இந்திய உறவு நீதியின் அடிப்படையில் அமைய வேண்டும். இராணுவ பலாத்காரத்தின் அடிப்படையில் அல்ல. இதனை இவ்விரு நாடுகளும்

(7-ம் பக்கம் பார்க்க)

வள்ளலாரின் நெறியோடுமட்டுமின்றி அவரால் போற்றிப் பாராட்டப்பெற்ற

[23...10...63ல் தாராபுரம் சன்மார்க்க சங்கத்தில் தவத்திரு அடிகளார் அவர்கள் ஆற்றிய பேருரை.]

எந்தக்குறைய எந்த ஒரு பெரியார் எந்த நாளிலே இது தவறு என்று இடித்துக் கூறினாரோ அந்தத் தவற்றை அந்தக் குறையை அவர் காலத்திலாவது அல்லது அடுத்த தலைமுறையிலாவது நாம் நீக்கினோமில்லை. குறைகளைந்தோம் இல்லை.

திருவள்ளுவர் காலந்தொட்டு, அப்பரடிகள் காலம் உள்பட மாணிக்கவாசகர் காலம் உள்பட-இராமலிங்கர்கள்-சான்றாண்மையுடையவர்கள் தோன்றி இனிய தமிழில் எண்ணற்ற அறிவுரைகளை எடுத்துச் சொல்லிவந்திருந்தாலும்கூட அவற்றையெல்லாம் நம்மவர்கள் போற்றத் தெரிந்தார்கள், புகழக் கற்றுக் கொண்டார்கள்-பஜனை மடத்தில் வைத்து வழிபாடு செய்யக் கற்றுக் கொண்டார்கள். மற்றபடி அவற்றை நடை முறைக்குக் கொண்டு வரவில்லை.

இந்த நாட்டு மக்கள்-கதறுகிறவர்களும் கேட்கிறவர்களும் செயல்பட மாட்டார்கள். இப்படி இந்த நாட்டின் போக்கு அமைந்திருப்பதைக் கண்டு நான் பெரிதும் வருத்தப்படுகிறேன். அப்படியிருந்தும், எனக்கு ஏமாற்றமும் தோல்வி மனப்பான்மையும் ஏற்பட்டும் கூட நான் தொடர்ந்து எனது பணிகளைச் செய்து கொண்டிருக்கிறேன் என்றால், இன்னும் எனக்கு வயது நிறைய ஆகாததால் ஒரு கால் என் தலைமுறையில் முடிந்தாலும் முடியலாமோ என்ற ஆசைதான். ஆனாலும் இராமலிங்கர் கூறியதுபோல, கடைவிரித்தேன். கொள்வாரில்லை; கட்டிக்கொண்டேன் என்று சொல்லும்படியாக - இந்தத் தலைமுறைத் தமிழர்கள் என்னை விட்டு விடமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அந்த நம்பிக்கை பொய்க்கக்கூடாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அப்பரடிகள், மணிவாசகரின் நெறிகளையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதே

அடிகள் காலம் உள்பட இன்று வரை அவர்கள் இடித்துக் கூறிய குறைகளையே நாம் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர - சொல்லிவந்திருக்கிறோமே தவிர அவற்றிலிருந்து மக்கள் விடுதலை பெற்றிருக்கிறார்களா என்றால் இல்லை இல்லை இல்லை என்ற பதில்தான் கிடைக்கும்.

இந்த நாட்டில் ஆயிரம் ஆண்டுக்கு ஒருதரம் அல்ல, ஒரு நூற்றாண்டுக்கு ஒருதரம் பெரியவர்கள்-கொள்கையாற்சிறந்தவர்கள்-சால்புடையவர்

இந்த நாட்டில் வள்ளலார் பிறந்தார்-திரும்ப ஒரு வள்ளலார். பிறந்து வந்தாலும்கூட இந்தக் காரியம் முடியுமா என்பது எனக்குச் சற்று ஐயப்பாடுதான். இன்று நேற்றல்ல-ஆயிரம் ஆண்டுக்கால வரலாற்றைப் பார்க்கிறேன். இந்த நாட்டு வரலாற்றில், ஒரு 300 அல்லது 500 ஆண்டுகள் ஒரு ஒழுக்கநெறியைச் சேர்ந்தாற்போல தமிழர்கள் பின்பற்றியதாகக் கூற முடியாது. நாம் எவ்வளவுதான் பேசினாலும், எவ்வளவுதான் விடிய விடியக் கதறினாலும்

அருள் நெறித் திருக்கூட்டத்தினர் இந்த சன்மார்க்க சங்கங்களில் கலந்து கொள்ளக் கூச்சப்படுகிறார்கள் என்று சொன்னார்கள் - என்

அருள்நெறித் திருக்கூட்டத்தினரின் அடிப்படைக் கொள்கையாகும்

னைப் பொறுத்தவரை ஏறாத மேடையில்லை. ஏறாத மேடை இறங்குகிற மேடை என்ற வேறுபாடு எனக்கில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். என்னோடு முற்றிலும் கருத்துவேறுபாடு கொண்டவர்களின் மேடைகளிலும் போய்க் கலந்து கொண்டு அவர்களின் பொல்லாப்பை ஏற்றுக் கொண்டவர்களில் நானும் ஒருவன். இப்படிச் சொல்லுவதைவிட நான்தான் என்று சொன்னால் கூடத் தப்பில்லை. இப்படி எல்லா மேடைகளுக்கும் கூச்சமின்றிச் செல்லுகிற வாய்ப்பை ஆண்டவன் எனக்கு எந்த வழியோ அருளிச் செய்திருக்கிறார். ஆனால் அருள் நெறித்திருக் கூட்டத்தினர்- அச்சப்படுகின்றனர் - கூச்சப்படுகின்றனர் என்றால, அதற்குக் காரணம் அவர்கள் வள்ளலாரின் நெறி மட்டுமின்றி, வள்ளலாருக்கு முன்னமேயே வள்ளலாராலேயே பாராட்டப்பெற்ற பெருமக்களின் நெறியையும் ஏற்றுப் போற்றிப் பாராட்ட வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்தக் கொள்கையோடு தான் அருள்நெறித் திருக்கூட்டம் தொடங்கப்பெற்றது. வள்ளலாரின் நெறியோடு, அப்பரடிகள் மாணிக்கவாசகர் போன்றவர்களின் நெறியையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அருள் நெறித் திருக்கூட்டத்தின் அடிப்படைக் கொள்கை. சன்மார்க்க நெறியினர் காலப்போக்கில் உருவ வழிபாடு திருக்கோயில் வழிபாடு போன்றவைகளில் நம்பிக்கையின்றித் தனியே ஒரு மடம் கட்டி, தனியே ஒரு ஜோதி வைத்து வழிபடும் உணர்வுடையவர்களாக ஆகிவிட்டமையின் காரணமாகத் திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாக்க முடியாமற் போய் விடுமோ என்ற அச்சம் சிற்சில இடங்களில் அருள் நெறித் திருக் கூட்டத்தினர்க்கு இருக்கிறது. அந்த அச்சத்தை மாற்ற வேண்டிய பொறுப்பு சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்தவர்களுக்கும் உண்டு என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(வளரும்)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து காட்டும் என்றால் அது உலகத்துக்கே வழி காட்டுவதாகும்.'' மாவ்-சே-துங்குக்கு சங்கரராவ்தேவ் எழுதியுள்ள கடிதம் டில்லியிலுள்ள சீனத் தூதுவர் மூலம் பீக்கிங்குக்குச் சென்றுள்ளது.

திரு. சித்தராஜ் தத்தா மூன்று நாட்களாக எங்களுடன் இருந்தார். பல முக்கிய கேள்விகள் பற்றிச் சர்ச்சை செய்தோம். அக்டோபர் 24ம் தேதி சித்தராஜ் ஹாங்காங் செல்லுவார். ஹாங்காங் கவர்னருக்கு ஏற்கெனவே எழுதியுள்ளோம். ஹாங்காங் சீனாவின் நுழை வாயில். அங்கு சென்று நாங்கள் சீனாவின் கதவைத் தட்ட வேண்டும் என்று நினைக்கிறோம். ''தட்டுங்கள் திறக்கப்படும்'' என்பது ஏசுநாதர் வாய்மொழி.

ஹாங்காங் செல்ல ஹாங்காங் சர்க்கார் வாய்ப்புத் தருமா? ஹாங்காங் வழி விடவில்லை என்றால் என்ன செய்வது? இப்பொழுது நாங்கள் நேபாவின் அருகில் இருக்கிறோம். போர் நடந்த நேபா வழியாகச் செல்லலாமா? சீனா எல்லைக்குப் போய் அதனைக் கடந்து செல்ல முயலலாமா? இந்திய அரசாங்கம் இதற்கு அனுமதி அளிக்குமா?

இக் கேள்விகளுக்கு விடை காலத்தின் கையில் இருக்கிறது. கடவுளின் கையில் இருக்கிறது. வினோபா அடிகள் அண்மையில் எங்களுக்குச் சொல்லி அனுப்பிய செய்தியுடன் இக் கடிதத்தை முடிக்கிறேன். ''வெற்றி என்பது செய்யும் முயற்சியே'' ★

தொழில் வளர்ச்சிக்குழுக்கூட்டம்

தேவகோட்டை வட்டார தொழில் அபிவிருத்தி கமிட்டிக் கூட்டம் காரைக்குடி நகர சபையில் தொழில் அதிபர் திரு. அ. மு. மு. முருகப்பசெட்டியார் தலைமையில் நடைபெற்றது.

தேவகோட்டை ஆர் டி.ஓ. திரு எஸ். கானே வரவேற்றார். தலைவர் தமது தலைமையுரையில் ரூ 80 லட்சம் மூலதனத்தில் இயந்திரக் கருவி தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட இருக்கிறதென்றும், அமைச்சர் திரு. வெங்கட்ராமனைக் கலந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பேசினார். மேற்படி தொழிற்சாலை அமைக்க திரு. முருகப்பசெட்டியார் தலைமையில் திருவாளர்கள் பழனியப்ப செட்டியார், வைரவன் செட்டியார், எம். எஸ். பி. அழகப்பன், என். மாணிக்கம் செட்டியார், வி. எஸ். சிவலிங்கம் செட்டியார் ஆகியோர் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது

தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஒரு முந்திரிஎண்ணெய் தொழிற்சாலையை அமைக்க இருப்பதாக திரு ராஜகோபாலன் பேசினார். சிவகெங்கை தொழில் இலாகா துணை டைரக்டர் திரு. ஏ, டி. பெருமாள்பேசுகையில் காரைக்குடி தொழில் பேட்டையில் உள்ள 18 யூனிட்டுகளில் 9 கட்டி முடித்து விட்டன என்றும், பாக்கி 9 சீக்கிரம் கட்டி முடிக்கப்படும் என்றும் பேசினார்.

மற்றும் திரு. கே. எஸ். ஜி. தாஸ், திரு. வி. எஸ். சிவலிங்கம்செட்டியார், திரு. சுப்ரமணியம் செட்டியார்' டாக்டர் திரு. அருணாசலம் ஆகியோர் பேசினார்கள்.

அப்பரடிகள் கருத்தைப் போற்றி வாழ்ந்தால் இன்பமே; எந்நாளும் துன்பமில்லை

—தவத்திரு அடிகளார்

"அன்றைக்கு ஒரேயொரு அப்பரடிகள்; ஒரேயொரு மாணிக்க வாசகர்; ஒரேயொரு இராமலிங்க அடிகள், ஒரேயொரு காந்தியடிகள் அதுபோல இன்றைக்கு நம்மிடையே ஒரேயொரு அடிகளார்தான் இருக்கிறார்."

என்று திருச்சி நகர அருள் நெறித் திருக்கூட்டத்தின் சார்பில் 20—10—63ல் திருச்சி தேவர் மன்றத்தில் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த தவத்திரு அடிகளார் அவர்களின் இலக்கியத் தொடர்ச் சொற்பொழிவுகளின் தொடக்க விழாவைத் தொடங்கிவைத்த தமிழ்நாடு சட்டமன்ற மேதகு செல்லப்பாண்டியன் அவர்கள் தமது தொடக்க உரையில், மதம், அரசியல், அறிவியல், சமூக இயல் முதலியன வெவ்வேறு போலத் தோன்றினாலும், அத்தனையும் மனிதனை வாழவைப்பதற்குத்தான். காந்தியடிகளின் வாழ்க்கையில் இவை அத்தனையும் விரவிக் கலந்திருந்தன. இவை அத்தனைக்கும் அடிப்படையாக உள்ளது அன்புதான்;

"அருள் நெறித் திருக்கூட்டம் என்றால் அது. மக்கட்கு ஒழுக்கத்தை நீதியை--நேர்மையை எடுத்துச் சொல்வதுதான் என்று சிலர் கருதக்கூடும். அருள்நெறி போல தாலும், அரசியல் வாதிகளாக இருந்தாலும், சமுதாய வாதிகளாக இருந்தாலும் மக்கட்குத் தொண்டு செய்வதுதான் முக்கியம், என்றுவலியுறுத்தினார்கள். பின்னர் 'ஏழில் இருபது' என்றதலைப்பில் தவத்திரு அடிகளார் அவர்கள் இன்றைய இருபதாம் நூற்றாண்டுப் பிரச்னைகள் பலவற்றை ஏழாம் நூற்றாண்டில் அப்பரடிகள் பேசியிருக்கிறார் என்பதனை அழகாகவும், தெளிவாகவும் அவர்கட்கேயுரிய தனித்தமிழ் நடையில் விளக்கினார்கள்.

தவத்திரு அடிகளார் அவர்கள் பேசுகையில், இருபதாம்

நாட்டுக்குத் தியாகம்செய்ய அருள்நெறிஅவசியம்

—மேதகு எஸ். செல்லப்பாண்டியன்

அவைத் தலைவர் மேதகு எஸ். செல்லப்பாண்டியன் குறிப்பிட்டார்.

திருச்சி நகர அருள்நெறித் திருக்கூட்டச் செயலர் திரு. சொ. கிருஷ்ணன் இறை வணக்கம் பாடினார். திருக்கூட்டத் தலைவர் திரு. ஆர். ஜெயதேவன் செட்டியார் அனைவரையும் வரவேற்றார்.

தமிழக அரசு, தமிழ் ஆட்சிக் குழுவின் தனி அலுவலர் திரு. கீ. இராமலிங்கனார் விழாவிற்குத் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில் அன்பு அறத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பதை அழகுற விளக்கினார்.

வீர உணர்வூட்டுவது வேறென்றுமில்லை. நாட்டுக்குத் தியாகம் செய்ய அருள்நெறி அவசியம். நல்லன பலவற்றைக் கற்கவும் கேட்கவும் நீங்கள் இங்கு அமர்ந்திருக்கிறீர்கள். சுவாமி அவர்களின் சொற்பொழிவு உங்களை நல்ல நெறியில் அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை" என்றார்கள்.

தவத்திரு அடிகளார் அவர்களைக் காணவும், அவர்களின் இனிய தமிழ்ப் பொழிவைக் கேட்கவும் எதிர்பாராத விதமாக வந்து சேர்ந்த துணையமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகரன் அவர்கள், 'நாம் சமய வாதிகளாக இருந் நூற்றாண்டுப் புதுமை என்று நாம் குறிப்பிடுகிற எல்லாவற்றையும் ஏழாம் நூற்றாண்டில் அப்பரடிகள் சொல்லியிருக்கிறார். சாக்ரடீஸ், இங்கர்சால், பிளேட்டோ போன்ற தத்துவ மேதைகளை உலகம் அறிந்து கொண்டிருக்கிற அளவிற்கு நமது அப்பரடிகளை இதுகாறும் தெரிந்து கொள்ளவில்லை. சமுதாய சீர்திருத்தத்திற்கு அவர்களையெல்லாம் விட அப்பரடிகளையே நான் பெரிதும் போற்றுகிறேன்;

"அப்பரடிகளின் கோலம் மிகப்பழையது; அவரது

(11-ம் பக்கம்)

யாராக இருப்பினும் மக்கட்குத் தொண்டுசெய்வதே முக்கியம்

—திருமதி மரகதம் சந்திரசேகரன்

செய்திச் சுருள்

கீழ்வேளூரில் மண்டலாபிஷேகவிழா

கீழ்வேளூர் அட்சயலிங்க சுவாமி தேவாலய மண்டலாபிஷேக விழாவையொட்டி 16-10-63ல் சமயக் கருத்தரங்கில், தவத்திரு அடிகளார் அவர்கள் சமய வாழ்க்கையின் இன்றியமையாமை குறித்து அரியதோர் உரையாற்றினார்கள். கோயில் நிர்வாக அலுவலர் திரு த. நாகராசன் நன்றிகூறினார்.

சிதம்பரத்தில் காந்தியடிகள் நினைவு நாள்

சிதம்பரம் காந்தி மன்றத்தின் சார்பில் 14-10-63ல் திரு எஸ். இராமலிங்கம் தலைமையில் 'காந்திஜெயந்தி விழா' கொண்டாடப்பெற்றது. திரு. சி. இராமலிங்கம் பேசியபின் தவத்திரு அடிகளார் அவர்கள் காந்தியடிகளின் கொள்கைகளை விளக்கி அரியதோர் சிறப்புரையாற்றினார்கள். பின்னர் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவ மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன.

மதுரையில் பாரதிவிழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மதுரை நகரக்கிளையின் சார்பில் 13-10-63ல் பாரதி விழா சிறப்பாக நடைபெற்றது. முற்பகல் திரு. செ. சீனிவாசன் தலைமையில் நடைபெற்ற உரையரங்கில் தவத்திரு அடிகளார் அவர்கள் 'பாரதியின் நெஞ்சம்' என்பது பற்றி அரியதோர் உரையாற்றினார்கள். பாரதியாரின் தம்பி திரு. சி. விசுவநாதன் வாழ்த்துரை வழங்கினார். திருவாளர்கள் தெ. வெ. ஆழ்வான், அ. அரங்கராசன், இரா. நவகிருட்டினன், கலைச்செல்வன், மதுரை வளவன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பிற்பகல், பைந்தமிழ்ப் பாவலர் திரு. அ. கி. பரந்தாமனார் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர்கள் எண்மர் தங்கள் கவிதைகளை அரங்கேற்றினர்.

பின்னர் பாரதியை மிகுதியாகக் கவர்ந்தது அரசியலா? ஆன்மீகமா? என்றதலைப்பில் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் ஒரு பட்டிமன்றம் நடைபெற்றது. அரசியல் என்ற தலைப்பில் திருவாளர்கள் எஸ். இராமகிருஷ்ணன், அ. இராமமூர்த்தி, மதுரை வளவன், கிருஷ்ணராம், திருமதி சக்தி பெருமாள் ஆகியோரும், ஆன்மீகம் என்ற தலைப்பில் திருவாளர்கள் தா. பாண்டியன், குமரி அனந்தன், வி. ஜி. சீனிவாசன், பாலசுப்பிரமணியன், குமாரி இரா. மீனாட்சி ஆகியோரும் பேசினார்கள். தலைவர் அவர்களின் சொற்பொழிவு பின்னர் வரும். இரவு, 'தமிழ்நாடு' ஆசிரியர் திரு. தி. மாணிக்கவாசகம் செட்டியார் தலைமையில் திருமதி பாலம் இராமமூர்த்தியின் இன்னிசை நடைபெற்றது.

ஓம்கங்கை விநாயகர் அ. நெ. திருக்கூட்டம்

சென்னை மூர்மார்க்கெட்டிலுள்ள ஓம்கங்கை விநாயகர் அருள்நெறித் திருக்கூட்ட நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. அவ்வமயம், கீழ்க்கண்டவர்கள் நிருவாகிகளாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

திரு. பி. பி. செல்வராஜுலு முதலியார் தலைவர்; திரு. சி. பஞ்சாட்சரம் செட்டியார் துணைத்தலைவர்; திரு. எம். வி. சிவசங்கர முதலியார் பொருளாளர், திரு. என். கே. தர்மலிங்கம் திரு. சிடி. ரங்கநாதன், திருமதி எம். சண்பகவல்லி அம்மையார் ஆகியோர் செயலாளர்கள்.

பொறுத்துக் கொள்க

ஆயுத பூஜையை முன்னிட்டு அச்சகத்திற்கு விடுமுறையாதலால் 28-10-63 தமிழகம் சற்று தாமதமாக வருகிறது. அன்பர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

—துணை ஆசிரியர்

சென்னையில் பட்டிமன்றம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில், 26-10-63ல் சென்னை கோகலே மன்றத்தில் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் ஒரு பட்டிமன்றம் ஏற்பாடு செய்யப் பெற்றது. 'தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மிகுதியும் உதவியது காதலா? வீரமா? என்பது பட்டிமன்றத்தின் தலைப்பு.

காதலே-என்று வலியுறுத்தி முகவை திரு. ராஜமாணிக்கமும்வீரமேஎன்று வலியுறுத்தி திரு. ஜெயகாந்தனும் விவாதத்தைத் தொடங்கி வைத்தனர். காதலே என்ற விவாதத்தைத் தொடர்ந்து திரு. சிதம்பர ரகுநாதன் திரு. கே. சி. எஸ். அருணாசலம் ஆகியோரும் வீரமே என்ற விவாதத்தைத் தொடர்ந்து திரு. தா. பாண்டியன், திரு. பாலதண்டாயுதம் ஆகியோரும் பேசினர். பட்டிமன்றம் மிகவும் சுவையோடுநடந்தது.

முடிப்புரையில் தவத்திரு அடிகளார் அவர்கள் இரு கட்சியினரின் விவாதங்களையும் தனித்தனியே அலசி ஆராய்ந்து அவற்றின் குறை நிறைகளை எடுத்து விளக்குகையில் கூறியதாவது:

தமிழ் இலக்கியம் தோன்றத் தூண்டுகோலாயிருந்தது காதல்; அது செழிப்புற்று வளர்த்துணை செய்தது வீரம்; காதலும் வீரமும் வலது காலும் இடதுகாலும் போலத்தான். எனினும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வீரச் சுவையும், இன்னொரு காலகட்டத்தில் காதற்சுவையும் தமிழ் இலக்கியத்தில் இருப்பதைக் காண்கிறோம்; ஒரே இலக்கியத்தில் காதலும் வீரமும் கலந்து உறவாடுவதையும் காண்கிறோம். பொதுவாகக் காலவரையறை வேண்டும். காலவரையறை இன்றிப் பேசப்புகுதல், எல்லைவகுத்துக் கொள்ளாமல் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபடுவது போன்றதுதான். இறுதியாக 'இன்றைய நிலையில் நாட்டிற்குத்தேவை ஆண்மை உணர்வு-வீரம். இலக்கியம் மூலம் அந்த வீர உணர்வைத் தூண்டவேண்டும்'' என்று கூறினார்கள். (தவத்திரு அடிகளார் அவர்களின் முழுப்பேச்சு பின்னா வரும்)

தொடக்கத்தில் திரு. தா. பாண்டியன் அனைவரையும் வரவேற்றார். இறுதியில் திரு. சிதம்பர ரகுநாதன் நன்றிகூறினார்.

குன்றக்குடியில் கோடியருச்சனைத் தொடக்கம்

குன்றக்குடி ஸ்ரீ சண்முகநாதப்பெருமானுக்கு 21-10-63 திங்கட்கிழமை கோடிஅருச்சனை தொடங்கியது. அன்று காலை 4 மணிக்கு தவத்திரு அடிகளார் அவர்கள் தமது ஆத்மார்த்திக பூசையை முடித்துவிட்டுப் பின்னர் கோயிலுக்குச் சென்றார்கள். காலை 6 மணி அளவில் விநாயகர்வழிபாடு நடைபெற்றது. 9 மணி அளவில் கோடி அர்ச்சனைக் குழுத்தலைவர் தவத்திரு அடிகளார் அவர்கள் கோடி அருச்சனையைத் தொடங்கிவைத்தார்கள்.

ஸ்ரீ சண்முக நாதப் பெருமானுக்கு மிக அழகாக அலங்காரம் செய்யப் பெற்றிருந்தது. அருச்சனைத் தொடக்கத்தன்று ஓயாத மழை பெய்து கொண்டிருந்ததெனினும், புயல் அறிவிப்புச் செய்தி பற்றிய அச்சம் மக்கள் மனத்தில் பரவியிருந்ததெனினும், ஆண்டவன் திருவருள் ஒன்றினையே நம்பி ஏராளமான உள்ளூர், வெளியூர் அன்பர்களும், பிரமுகர்களும் வந்திருந்து ஸ்ரீ சண்முகநாதப் பெருமானின் திருவருட்பேற்றை எய்திமகிழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊர்மக்கள் அனைவரும் அருச்சனையைக் கேட்டு மகிழுமாறு ஒலிபெருக்கி ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது. அருச்சனை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அறநிலைய ஆணையர் வருகை

இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கள் 3—11—63 காலை 9-30 மணியளவில் குன்றக்குடிக்கு வருகைதந்து ஸ்ரீ சண்முகநாதப் பெருமானுக்கு நடைபெறும் கோடி அருச்சனையில் கலந்து கொள்ள இசைந்துள்ளார்கள்.

உ. மு. தேவர் மறைவு

அடிகளார் செய்தி

பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் மறைவு தமிழகத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். சிறந்த சமயப்பற்றும்--தேசபக்தியும் உடையவராகவும் ஒளிவு — மறைவில்லா ஒரு வீரராகவும் திகழ்ந்தார் திரு தேவர். அவருடைய ஆன்மா சாந்தியடைய திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளார். பொய்த்தவ வேடம் பூண்ட அந்தப் பாதகன், 'அன்ப நானும் நீயும் தனித்திருத்தல் வேண்டும்; நின் மனைவியும் இங்கிருத்தல் கூடாது' என்றான். பொய்த் தவ வேடத்தை மெய்யென நம்பிய மெய்ப்பொருளார், தம் அன்பு மனைவியாரை அந்தப்புரத்திற்குச் செல்லுமாறு பணித்தான். வஞ்சகனைத் தவிசமர்த்தி, 'இனி யருள் செய்யும்' என்று பணிவொடு வேண்டினர்.

'இரக்கமென்றொரு பொருளிலா' அவ்வரக்கன், கைத் தலத்திருந்த வஞ்சக் கவளியை மடிமேல் வைத்துப் புத்தகத்தை அவிழ்ப்பவன் போல நடித்தான். தான் கவளியில் ஒளித்துக் கொணர்ந்த அந்த உடைவாளால் தான் முன்னர் எண்ணியிருந்தபடியே செய்து முடித்தான்; ஆம். முத்தநாதன் மெய்ப்பொருளாரைக் கத்தியால் குத்தினான். மெய்ப்பொருளாரோ, அந்நிலையிலும், 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' என்று கூறி அத்தொழும்பனைத் தொழுதார். (வளரும்)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கையும். சிந்தனைகளும் மிகமிகப் புதியன. பழமையையும், புதுமையையும் இணைத்துச் சென்றவர் நமது அப்பரடிகள்'' என்று குறிப்பிட்டார்கள். இறுதியாக அப்பரடிகளின் சமய சீர்திருத்தக் கருத்துக்களையும் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களையும் இந்நாடும் நாமும் போற்றி வாழ்ந்தால் 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று கூறி முடித்தார்கள். தவத்திரு அடிகளார் அவர்களின் 'பேருரை' அடுத்த வாரம் வெளிவரும்.

தலைவர் முடிப்புரைக்குப் பின் செயலர் திரு. சொ. கிருஷ்ணன் நன்றிகூறினர்.

தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தாலும் கூடப் பெருந்திரளான மக்கள் மன்றத்தின் உட்புறமும், வெளிப்புறமும் கூடி, அடிகளார் அவர்களின் சொற்பொழிவை அமைதியாகக் கேட்டு மகிழ்ந்தது குறிப்பிடத் தக்கது.

அடிகளார் சுற்றுப்பயணம்

நவம்பர், 63.

1 காரைக்குடி
அழகப்பா கலைக்கல்லூரி

2 சென்னை, சட்டக்கல்லூரி

3 காவேரிநகர்

5 திருமங்கலம் தாலுகா

6 ஷை (மதுரை ஜில்லா)

7 தேவாரம்

8 பரமக்குடி

யார் யார்?

பிறரைக் கண்டு அஞ்சி நடுங்குபவன் கோழைத்தனமானவன்; பிறர் கண்டு அஞ்சி நடுங்கும்படியாக நடந்து கொள்பவன் மிருகத்தனமானவன்.

-அடிகளார்

தமிழகம்

கிழமை இதழ்

சிறப்பாசிரியர்:
தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

தவத்திரு அடிகளார் அவர்களின் சொல்லோவியங்களையும், எழுத்தோவியங்களையும் தாங்கி வெளிவரும் சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய ஏடு.

ஆண்டுக்கட்டணம் ரூ. 5

படிப்பகங்கள் பொதுச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு

ரூபாய் மூன்று மட்டும்

செலுத்தினால் போதும். தமிழகம் ஓராண்டுக்குத் தொடர்ந்து கிடைக்கும்.

......தகவல்கட்கு......

மேலாளர், 'தமிழகம்',
குன்றக்குடி
இராமநாதபுரம் மாவட்டம்

Registered No. M. 7058 THAMILAGAM - Weekly 28-10-63

அடிகளார் அருளிய நூல்கள்

கொடியா கொம்பா (மூன்றாம் பதிப்பு)	0-30
திருவாசகத் தேன்	0-25
அருளியலும் அறிவியலும்	0-25
ஈழத்தில் அருள்நெறித் தந்தை தொகுத்தவர் ஈழத்துச் சிவானந்தம்	0-75

அருள்நெறிப் பண்ணை, குன்றக்குடி
(இராமநாதபுரம் மாவட்டம்)

சன்மார்க்க சங்கத்தினர் நடைமுறைபற்றி அடிகளார்

வள்ளல் இராமலிங்க சுவாமிகள் பாரம் பரியமான சிவநெறியைச் சார்ந்தவர் சைவ நாயன்மார்கள் நால்வர் மீது அளவுகடந்த பக்தியும் உடையவர். திருவாசகம் என்ற கடலில் தோன்றியதே திருவருட்பா. அப்படியிருக்க இப்பொழுது சில சமரச சன் மார்க்க சங்கத்தினர் தேவாரம் திருவாசகம் ஓதுதலைப் புறக்கணிக்கின்றனர். திருக்கோயில் வழிபாடு செய்யும் உணர்ச்சியினின்றும் விலகுகின்றனர். இது வரவேற்கத் தக்கதில்லை.

—தாராபுரம் சன்மார்க்க சங்கத்தில் அடிகளார்.

வெளியிடுவோர், ஆசிரியர்: ஆறு. சுப்பிரமணியன், அடிகளார் அச்சகம், குன்றக்குடி. இராமநாதபுரம் மாவட்டம். துணை ஆசிரியர்: சாமி பழனியப்பன்.